பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

21 04 2024 7 15

ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. ஜனநாயகத்தில் மக்களின் நம்பிக்கையை பெறும் நோக்கிலேயே அரசியல் கட்சிகள் தேர்தலில் போட்டியிடுவதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. மக்களவைக்கு நடைபெறும் மூன்றாம் கட்ட தேர்தலில் வேட்புமனுக்களை திரும்பப் பெறுவதற்கு நாளை கடைசி நாளாகும்.

3. ஒடிசா மற்றும் மேற்குவங்கத்தில் போட்டியிடும் 4 வேட்பாளர்களின் பெயர்கள் அடங்கிய மற்றொரு பட்டியலை காங்கிரஸ் வெளியிட்டுள்ளது.

4. மாலத்தீவு நாடாளுமன்ற தேர்தல் இன்று நடைபெற உள்ளது.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் கொல்கத்தா - பெங்களூருவையும், பஞ்சாப் – குஜராத்தையும் எதிர்கொள்கின்றன.

*---- இனி விரிவான செய்திகள் --*

<<<<>>>>

ஜனநாயகத்தில் மக்களின் நம்பிக்கையை பெறும் நோக்கிலேயே அரசியல் கட்சிகள் தேர்தலில் போட்டியிடுவதாக பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

தனியார் செய்தி ஊடகத்திற்கு பேட்டி அளித்த அவர், தான் ஒரு ஆட்சியாளராக இல்லாமல் மக்கள் சேவகனாக தனது பணியை மேற்கொண்டு வருவதாக கூறியுள்ளார்.

மக்களவைத் தேர்தலில் பிஜேபி தலைமையிலான கூட்டணி வெற்றி பெற்று மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்றால் நாட்டை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும் வகையில் சட்டங்கள் மற்றும் கொள்கைகள் வகுக்கப்படும் என்று கூறினார்.

நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் பல ஆண்டுகளாக ஆட்சிப் பொறுப்பில் இருந்தவர்கள் மக்களுக்கு சேவை செய்வதற்கான பொன்னான வாய்ப்பை தவறவிட்டுவிட்டதாக கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர்களை அச்சுறுத்தும் வகையில் புலனாய்வு அமைப்புகளை தவறாகப் பயன்படுத்தப்படுகிறது என்ற கேள்விக்கு பதிலளித்த அவர், நாட்டில் ஊழலை முற்றிலும் அகற்றும் வகையில் புலனாய்வு அமைப்புகள் எவ்வித தலையீடும் இன்றி சுதந்திரமாக செயல்படுவதாக திரு. நரேந்திர மோடி கூறினார்.

<<<<>>>>

மக்களவைத் தேர்தலில் இரண்டாம்கட்டமாக வரும் 26ஆம் தேதி வாக்குப்திவு நடைபெற உள்ள தொகுதிகளில் அரசியல் கட்சிகளின் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

வாக்குப்பதிவிற்கு இன்னும் நான்கு நாட்களே எஞ்சியுள்ள நிலையில், பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள், வேட்பாளர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

கேரளா, கர்நாடகா, ராஜஸ்தான், உத்தரப்பிரதேசம், மகாராஷ்டிரா உள்ளிட்ட 13 மாநிலங்களில் உள்ள 89 தொகுதிகளுக்கு தேர்தல் நடைபெற உள்ளது.

கேரளாவில் 20 தொகுதிகளிலும், கர்நாடகாவில் 14 தொகுதிகளிலும் ராஜஸ்தானில் எஞ்சியுள்ள 13 தொகுதிகளுக்கும் தேர்தல் நடைபெற உள்ளது.

உத்தரப்பிரதேசம் மற்றும் மகாராஷ்டிராவில் தலா 8 தொகுதிகளிலும், மத்தியப்பிரதேசத்தில் 7 தொகுதிகளிலும், அசாம் மற்றும் பீகாரில் தலா 5 தொகுதிகளிலும் வாக்குப்திவு நடைபெற உள்ளது.

மேற்குவங்கம் மற்றும் சத்தீஸ்கர் மாநிலங்களில் தலா 3 தொகுதிகளுக்கும், திரிபுரா மற்றும் ஜம்மு-கஷ்மீர் யூனியன்பிரதேசத்தில் தலா ஒரு தொகுதியும் இதில் அடங்கும்.

கர்நாடக மாநிலம் பெங்களூருவில் பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி நேற்று பிரச்சாரம் மேற்கொண்டார்.

பிஜேபி தலைமையிலான மத்திய அரசின் கொள்கைகளால் எஸ்.சி, எஸ்.டி மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மக்கள் பலனடைந்துள்ளதாக கூறினார்.

அரசின் நடவடிக்கைகளால் 25 கோடிக்கும் அதிகமான மக்கள் வறுமையின் பிடியிலிருந்து விடுபட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கடந்த 10 ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார நடவடிக்கைகள் காரணமாக அன்னிய முதலீடுகள் ஏற்றுமதி மற்றும் உற்பத்தித் துறை வளர்ச்சியடைந்துள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

அரசியல் ஆதாயங்களுக்காக கலாச்சாரம், மதம் மற்றும் மொழிகள் பயன்படுத்தப்பட்டு வருவதாக காங்கிரஸ் பொதுச்செயலாளர் திருமதி பிரியங்கா காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

சாலக்குடியில் நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அவர், அரசின் கொள்கைகளால் வேலைவாய்ப்பின்மை மற்றும் வறுமை அதிகரித்துள்ளதாக தெரிவித்தார்.

நாட்டின் வளர்ச்சி விகிதம் 7 புள்ளி 5 சதவீதத்திலிருந்து 5 புள்ளி 9 சதவீதமாக குறைந்துள்ளதாகவும், நாட்டின் கடன் சுமை 205 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது என்றும் அவர் கூறினார்.

மூன்றாம் கட்டமாக அடுத்த மாதம் 7ஆம் தேதி நடைபெற உள்ள 10 மாநிலங்கள் மற்றும் 2 யூனியன் பிரதேசங்களைச் சேர்ந்த 94 தொகுதிகளுக்கான வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை நேற்று நிறைவடைந்துள்ளது.

வேட்புமனுக்களை விலக்கிக்கொள்ள நாளை கடைசி நாளாகும்.

இதனிடையே நான்காம் கட்ட மக்களவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் நடைபெற்று வருகிறது.

நான்காம் கட்டமாக 9 மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன்பிரதேசத்தைச் சேர்ந்த 96 தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 13ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

இதற்கான வேட்புமனு தாக்கல் இம்மாதம் 25ஆம் தேதியுடன் நிறைவடைகிறது.

<<<<>>>>

ஒடிசா மற்றும் மேற்குவங்கத்தில் போட்டியிடும் 4 வேட்பாளர்களின் பெயர்கள் அடங்கிய மற்றொரு பட்டியலை காங்கிரஸ் வெளியிட்டுள்ளது.

ஒடிசா மாநிலத்தில் இருந்து 3 வேட்பாளர்களும், மேற்குவங்க மாநிலத்தில் ஒரு வேட்பாளர் பெயரும் இப்பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

ஒடிசா மாநிலம் சம்பல்பூர் தொகுதியில் திரு. துலால் சந்திரபிரதான் போட்டியிடுகிறார். மேற்குவங்கத்தில் உள்ள **Kanthi** மக்களவைத் தொகுதியில் திரு. **Urbashi Bhattacharya** போட்டியிட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்களை அக்கட்சியின் மத்திய தேர்தல் குழு இறுதி செய்து வெளிளிட்டுள்ளது.

<<<<>>>>

மகாவீர் ஜெயந்தி இன்று கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி குடியரசுத்தலைவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், மஹாவீரரின் போதனைகள் அகிம்சை மற்றும் கருணையை வலியுறுத்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த நாளில் சமூகத்தில் அன்பு மற்றும் நல்லிணக்கத்தை பரவச் செய்வதற்கு நாம் அனைவரும் உறுதிமொழி எடுத்துக்கொள்வதுடன், நாட்டின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்பு உணர்வுடன் பணியாற்ற வேண்டும் என்று குடியரசுத்தலைவர் தெரிவித்துள்ளார்.

பகவான் மஹாவீர் நிர்வாண் மஹோற்சவத்தை பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று காலை புதுதில்லியில் தொடங்கி வைக்கிறார்.

இந்நிகழ்ச்சியில் நினைவு அஞ்சல்தலை மற்றும் நாணயத்தை வெளியிட்டு அவர் உரையாற்றுகிறார்.

<<<<>>>>

மணிப்பூர் மாநிலத்தில் உள்ள 6 வாக்குச்சாவடிகளில் மறு வாக்குப்பதிவு நடத்துவது குறித்து பரிசீலிக்குமாறு தேர்தல் ஆணையத்தை அம்மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி கேட்டுக்கொண்டுள்ளார்.

முதற்கட்டமாக நேற்று முன்தினம் நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் 6 வாக்குச்சாவடிகளில் ஏற்பட்டட வன்முறைச் சம்பவங்கள் குறித்து அவர் விரிவான அறிக்கையை தேர்தல் ஆணையத்திடம் அவர் சமர்ப்பித்துள்ளார்.

எனினும் இதுவரை மறுவாக்குப்பதிவு குறித்த உத்தரவு எதுவும் தேர்தல் ஆணையத்திடம் இருந்து வரவில்லை என்று அம்மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதனிடையே அம்மாநிலத்தில் இரண்டாம் கட்ட தேர்தலுக்கான பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

அம்மாநிலத்தில் உள்ள 8 மாவட்டங்களைச் சேர்ந்த 13 சட்டப்பேரவைத் தொகுதிகளில் இரண்டாம்கட்டமாக வரும் 26ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.

இதில் 4 லட்சத்திற்கும் அதிகமான வாக்காளர்கள் தங்களது வாக்குகளை செலுத்த உள்ளனர்.

இதற்கென 848 வாக்குச்சாவடிகளுடன் கூடுதலாக மாற்றுத்திறனாயளிகளுக்கு என 9 சிறப்பு வாக்குச்வாடிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

<<<<>>>>

மாலத்தீவு நாடாளுமன்ற தேர்தல் இன்று நடைபெற உள்ளது.

அந்நாட்டின் எட்டு முக்கிய அரசியல் கட்சிகள் இந்த தேர்தலில் களம் காண்கின்றன.

மொத்தம் உள்ள 93 தொகுதிகளில் 368 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள்.

மாலியில் அமைக்கப்பட்டுள்ள 602 வாக்குச்சாவடிகளில் 2 புள்ளி 8 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர்.

இந்த தேர்தலையொட்டி அந்நாட்ட அதிபர், டாக்டர் மிசோ விடுத்துள்ள செய்தியில், ஸ்திரமான அரசை அமைப்பதற்கு மக்கள் ஆதரவளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

மேற்குவங்கம், ஜார்கண்ட் மற்றும் பீகார் மாநிலங்களின் ஒருசில பகுதிகளில் அடுத்த 3 நாட்களுக்கு கடும் வெப்பம் நிலவும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

எனினும் ஒடிசாவில் வெப்பநிலை இன்று முதல் படிப்படியாக குறைய தொடங்கும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

இந்நிலையில் ஆந்திர மாநில கடலோர பகுதிகள், ஏனாம், ராயலசீமா, தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் கேரளாவில் வரும் புதன்கிழமை வரை கடும் வெப்பம் நிலவும் என்று அந்த மையம் எச்சரித்துள்ளது.

இந்நிலையில் ஆந்திரப்பிரதேசத்தின் ஒருசில பகுதிகளிலும், அசாம், மேகாலயா, நாகாலாந்து, மணிப்பூர், மிசோரம் மற்றும் திரிபுரா மாநிலங்களில் அடுத்த 3 நாட்களுக்கு லேசானது முதல் மிதமானது வரை மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

கிழக்கு கடற்கரைப் பகுதியில் கடல்சார் பாதுகாப்பு தொடர்பான சவால்களை எதிர்கொள்ளும் வகையில் இந்திய கடற்படையின் தயார் நிலையை மதிப்பிடும் நோக்கில் பூர்விலஹார் பயிற்சியை இந்திய கடற்படை நடத்தியது.

இந்தப் பயிற்சியில் கப்பல்கள், நீர்மூழ்கிக் கப்பல்கள், விமானங்கள் மற்றும் சிறப்புப் படைகள் பங்கேற்றன.

பதற்றமாக சூழ்நிலைகளில் போர் தொடர்பான யூகம் வகுப்பது, ஆயுதங்களை சிறப்பான முறையில் கையாள்வது உள்ளிட்ட பல்வேறு கட்டங்களாக இந்தப் பயிற்சி நடத்தப்பட்டது.

இதில் கிழக்குக் கடற்படையைச் சேர்ந்த கப்பல்கள், இந்திய விமானப் படையின் விமானங்கள் மற்றும் அந்தமான் நிகோபார் மற்றும் கடலோர காவல்படையைச் சேர்ந்த கப்பல்களும் பங்கேற்றன.

<<<<>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் கொல்கத்தா அணி – பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

கொல்கத்தாவில் நடைபெறும் இப்போட்டி, மாலை மணி 3.30க்கு தொடங்குகிறது.

மற்றொரு போட்டியில் பஞ்சாப் அணி – குஜராத் அணியை எதிர்கொள்கிறது.

சண்டிகரில் நடைபெறும் இப்போட்டி இரவு ஏழரை மணிக்கு தொடங்குகிறது.

முன்னதாக நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஹைதராபாத் அணி 67 ரன் வித்தியாசத்தில் தில்லி அணியை வென்றது.

தில்லியில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் ஆடிய ஹைதராபாத் அணி நிர்ணயிக்கப்பட் 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 266 ரன் எடுத்தது.

267 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் ஆடிய தில்லி அணி, 19 புள்ளி ஒரு ஓவரில் 199 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

நடராஜன் அபாரமாக பந்துவீசி 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

ஹைதராபாத் அணியைச் சேர்ந்த ட்ராவிஸ் ஹெட் 32 பந்துகளில் 89 ரன்களும், அபிஷேக் ஷர்மா 12 பந்துகளில் 46 ரன்னும் எடுத்தனர்.

**<<<<The End>>>>**